**டிசம்பர் – 23**

# TNPSC துளிகள்

- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 600 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் நிகர மதிப்பைக் கொண்ட உலகின் முதல் நபராக எலோன் மஸ்க் ஆனார்.
- 2025–26 ஆம் ஆண்டு போட்டித் தொடரில் ஜார்க்கண்ட் அணியானது மாநிலங்களுக்கு இடையிலான 20-20 இறுதிப் போட்டியில் ஹரியானா அணியை வீழ்த்தி தனது முதல் சையத் முஷ்டாக் அலி டிராபி பட்டத்தை வென்றது.
- சண்டிகரில் உள்ள முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (PGIMER), தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்தியாவின் சிறந்த சுகாதாரத் தொழில்நுட்ப மதிப்பீட்டு (HTA) நிறுவன விருதை வென்றது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பொருநை தொல்பொருள் அருங்காட்சியகம்




- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை அருகே அமைக்கப்பட்டுள்ள பொருநை தொல்பொருள் அருங்காட்சியகத்தைத் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- 2021 ஆம் ஆண்டில் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட இந்த அருங்காட்சியகம் 56.36 கோடி ரூபாய் செலவில் 13 ஏக்கரில் கட்டப்பட்டுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூர், சிவகலை மற்றும் கொற்கை மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள துலுக்கர்பட்டி ஆகியவற்றிலிருந்துத் தோண்டி எடுக்கப் பட்ட கலைப்பொருட்கள் இதில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.
- காட்சிகளில் முதுமக்கள் தாழிகள், இரும்புக் கருவிகள், வெண்கலம் மற்றும் தங்க ஆபரணங்கள், நாணயங்கள், மட்பாண்டங்கள் மற்றும் தமிழி (பண்டையத் தமிழ் எழுத்து) எழுத்துக்களைக் கொண்ட கலைப்பொருட்கள் ஆகியவை அடங்கும்.
- கார்பன் கதிரியக்கக் கால கணிப்பு ஆனது சிவகளையில் கிமு 3300 மற்றும் ஆதிச்ச

நல்லூரில் கிமு 2613 ஆம் ஆண்டில் தமிழர்கள் இரும்புப் பொருட்களைப் பயன்படுத்தச் செய்ததைக் காட்டுகிறது.

# தேசியச் செய்திகள்

## துறைமுகப் பாதுகாப்பு வாரியம்





- ❖ கப்பல்கள் மற்றும் துறைமுக வசதிகளின் பாதுகாப்பை மேற்பார்வையிடுவதற்காக துறைமுகப் பாதுகாப்பு வாரியம் (BoPS) உருவாக்கப்பட உள்ளது.
- ❖ இணையவெளிப் பாதுகாப்பு மற்றும் துறைமுகத் தகவல் தொழில்நுட்ப உள் கட்டமைப்பை மையமாகக் கொண்டு, பாதுகாப்பு தொடர்பான தகவல்களை BoPS சேகரித்து, பகுப்பாய்வு செய்து, பரிமாறிக் கொள்ளும்.
- ❖ 2025 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் போக்குவரத்துச் சட்டத்தின் 13வது பிரிவின் கீழ் BoPS ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக இருக்கும்.
- ❖ இது துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் (MoPSW) கீழ் செயல்படும்.
- ❖ கப்பல்கள் மற்றும் துறைமுக வசதிகளின் பாதுகாப்பிற்கான ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை செயல்பாடுகளை BoPS மேற்கொள்ளும்.

## CSR மற்றும் சுற்றுச்சூழல் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- ❖ பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) என்பது சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் பாதுகாப்பை இயல்பாகவே உள்ளடக்கியிருக்க வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- ❖ சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான CSR செலவினம் என்பது தொண்டு அல்ல, அது ஓர் அரசியலமைப்பு கடமை என்று நீதிமன்றம் கூறியது.
- ❖ இந்தக் கடமை இந்திய அரசியலமைப்பின் 51A(g) ஆம் சரத்தின் கீழ் உள்ளது.
- ❖ MK ரஞ்சித்சிங் & பிறர் மற்றும் இந்திய ஒன்றியம் இடையிலான வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப் பட்டது.
- ❖ இந்த வழக்கு அருகி வரும் பறவை இனமான கானமயில் (கிரேட் இந்தியன் பஸ்டர்டு)

பறவைகளைப் பாதுகாப்பது தொடர்பானது ஆகும்.

❖ தங்கள் செயல்பாடுகள் ஆனது வனவிலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்குத் தீங்கு விளைவித்தால் அதற்கான வளங்காப்புச் செலவுகளை நிறுவனங்கள் ஏற்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது.




## பத்திரச் சந்தை குறியீடு மசோதா 2025





❖ நிதியமைச்சர் மக்களவையில் 2025 ஆம் ஆண்டு பத்திரச் சந்தை குறியீடு மசோதாவினை அறிமுகப்படுத்தினார்.

❖ இந்த மசோதா மேலும் விவாதத்திற்காக துறை தொடர்பான நிலைக்குழுவிற்கு

பரிந்துரைக்கப்படும்.

- இது இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியச் சட்டம், 1992; வைப்புத் தொகைச் சட்டம், 1996; மற்றும் பத்திர ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 1956 ஆகியவற்றை ஒரே சட்டமாக/குறியீட்டாக இணைக்கிறது.
- இந்த மசோதா, 9 ஆக இருந்த இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) வாரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை 15 ஆக அதிகரிக்க முன்மொழிகிறது.
- விதிமுறை இணக்கச் சுமையைக் குறைத்தல், ஒழுங்குமுறை நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பத்தால் இயக்கப் படும் பத்திரச் சந்தைகளை ஆதரித்தல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மசோதா முதலீட்டாளர் பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், நிதிச் சந்தைகளில் வணிகம் செய்வதை எளிதாக்குவதிலும் கவனம் செலுத்துகிறது.

## இந்தியாவில் சொத்துடைமை




- இந்தியாவின் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்கள் இரு சக்கர மோட்டார் வாகனங்கள், மகிழுந்துகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் போன்ற நீண்ட காலம் உழைக்கும் பொருட்களை அதிகளவில் வாங்குகின்றன.
- கைபேசிகள் தற்போது அனைத்து வீடுகளிலும் கிட்டத்தட்ட பொதுவானதாகி விட்டன.
- கிராமப்புறங்களில், அடிமட்டத்தில் உள்ள 40% (B40) மக்களிடையே ஒரு தசாப்தத்திற்கு முன்பு 10 சதவீதத்திற்கும் குறைவாக இருந்த மோட்டார் வாகனங்களின் உடைமை கிட்டத் தட்ட 50% ஆக உயர்ந்துள்ளது.
- குளிர்சாதனப் பெட்டிகள், குறிப்பாக நகர்ப்புற B40 குடும்பங்களில் பொதுவானதாகி வருகின்றன, இருப்பினும் ஜார்க்கண்ட், பீகார், ஒடிசா, மத்தியப் பிரதேசம், அசாம் மற்றும் சத்தீஸ்கர் போன்ற சில மாநிலங்களில் கிராமப்புறச் சொத்து உடைமை குறைவாகவே உள்ளது.
- உணவு அல்லாத பொருட்களுக்கானச் செலவினம் அதிகரித்துள்ளது அதே நேரத்தில் உணவுச் செலவினம் குறைந்துள்ளது.
- அடிமட்ட 40% (B40) பேர் மற்றும் மேல்மட்ட நிலையில் உள்ள 20% (T20) மக்களிடையே குறிப்பாக நகர்ப்புறங்களில் உடைமை இடைவெளிகள் குறைந்துள்ளன.

- வாகனங்களுக்கான அணுகல் ஆனது சிறப்பான சாலை இணைப்பு, சந்தை அணுகல் மற்றும் எளிதான நிதி விருப்பத் தேர்வுகள் மூலம் முன்னேற்றமடைந்துள்ளன.
- நீண்ட காலம் உழைக்கும் பொருட்களின் உடைமை அதிகரிப்பது மேம்படுத்தப் பட்ட வாழ்க்கைத் தரங்கள், உற்பத்தித் திறன் மற்றும் இயக்கம் ஆகியவற்றை நன்கு பிரதிபலிக்கிறது, மேலும் "சொத்துடைமை வறுமையை" இது குறைக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா - ஓமன் வேலைவாய்ப்பு சலுகை

- ஓமன், நிறுவனங்கள் தங்கள் பணியாளர்களில் தற்போது 20 சதவீதத்திற்குப் பதிலாக 50% இந்தியர்களை பணியமர்த்த அனுமதிக்கிறது.
- இந்த முடிவு ஆனது இரு நாடுகளுக்கும் இடையிலான பரந்த விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தின் (CEPA) ஒரு பகுதியாகும்.
- CEPA ஆனது சார்க் நாடுகளுக்கு ஓமன் அரசு வழங்கும் எந்தவொரு தொழிலாளர் தொடர்பான சலுகையும் தானாகவே இந்தியாவிற்கும் நீட்டிக்கும் ஒரு சமநிலைப் பிரிவை உள்ளடக்கியது.
- ஓமன் நாட்டில் தற்போது சுமார் ஏழு லட்சம் இந்தியர்கள் உள்ளனர் என்ற நிலையில் அவர்கள் ஆண்டுதோறும் சுமார் 2 பில்லியன் டாலருக்கும் அதிகமான பணத்தினை இந்தியாவிற்கு அனுப்புகிறார்கள்.




## UNAOC மன்றம்

- 11வது ஐக்கிய நாடுகளின் நாகரிகங்களின் கூட்டணி (UNAOC) மன்றக் கூட்டம் ஆனது சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் நடைபெற்றது.
- வாசுதேவக் குடும்பகம் மற்றும் மத நல்லிணக்கத்திற்கான தனது உறுதிப்பாட்டை இந்தியா இந்த மன்றத்தில் மீண்டும் உறுதிப்படுத்தியது.

- இந்த நிகழ்வின் முக்கிய கருத்துரு "UNAOC: Two Decades of Dialogue for Humanity — Advancing a New Era of Mutual Respect and Understanding in a Multipolar World" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோஃபி அன்னான், ஸ்பெயின் மற்றும் துருக்கியின் இணை நிதியுதவியுடன், 2005 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் தேதியன்று UNAOC கூட்டணியை நிறுவினார்.
- UNAOC மன்றத்தின் தலைமையகம் மற்றும் செயலகம் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் அமைந்துள்ளது.
- இந்த மன்றம் UNAOC மன்றத்தின் 20வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது என்ற நிலையில் நிலையான அமைதிக்கான அதன் எதிர்காலப் பாதையைத் திட்டமிடுவதில் அது கவனம் செலுத்துகிறது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### இருவாட்சிப் பறவைகளின் கணக்கெடுப்பு




- வன நிலப்பரப்புகளில் இருவாட்சிப் பறவைகளின் எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கு தமிழ்நாடு வனத்துறை ஒரு கள ஆய்வை நடத்த உள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பு 2025 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தின் பிற்பகுதியில் தொடங்கி இருவாட்சிப் பறவை இனப்பெருக்கக் காலமான 2026 ஆம் ஆண்டின் மார்ச்

அல்லது ஏப்ரல் மாத தொடக்கம் வரையில் தொடரும்.

- முதல் கட்டம் ஆனது ஆனைமலை, ஸ்ரீவில்லிபுத்தூர்–மேகமலை, மற்றும் களக்காடு–முண்டத்துறை புலிகள் வளங்காப்பகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வனப் பிரிவின் கீழ் உள்ள காரமடை மற்றும் மேட்டுப்பாளையம் எல்லைகளில் மேற்கொள்ளப்படும்.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது வன ஊழியர்கள், உயிரியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வாழ்விடங்கள் வழியாக நடந்து சென்று பார்வைகளைப் பதிவு செய்து அவற்றின் எண்ணிக்கை அடர்த்தியை மதிப்பிடுகின்ற எல்லை சார்ந்த நேரடிப் புலனாதல்/லைன் டிரான்செக்ட் முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்.
- இதில் மலை இருவாட்சி, மலபார் சாம்பல் இருவாட்சி, இந்திய சாம்பல் இருவாட்சி மற்றும் மலபார் கருப்பு வெள்ளை இருவாட்சி ஆகிய நான்கு இருவாட்சி இனங்கள் ஆவணப் படுத்தப்படும்.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் (ATR) இந்தியாவின் முதல் சிறப்பு இருவாட்சி வளங்காப்பு மையத்தை நிறுவ உள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்தது.

## மனித யானை மோதல் கட்டுப்பாட்டு மையம் - நீலகிரி





- மனித-யானை மோதலை நிர்வகிப்பதற்காக கூடலூர் வனப் பிரிவில் உள்ள நடுகாணி மலைத்தொடரில் ஒரு கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் திறக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வனப்படை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் 6 கோடி ரூபாய் செலவில் இந்த மையம் கட்டப்பட்டது.
- மொத்தம் 46 மனித-வனவிலங்கு மோதல் (HWC) மண்டலங்கள் இங்கு அடையாளம் காணப் பட்டன.
- 34 மண்டலங்களில் செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் ஒளிப்படக் கருவிகள் மற்றும் 12 மண்டலங்களில் மேம்பட்ட AI கண்காணிப்பு அமைப்புகள் உள்ளன.
- வனவிலங்குகளின் நடமாட்டம் 24 மணி நேரமும் கண்காணிக்கப் பட்டு, நிகழ்நேர எச்சரிக்கைகள் ஆனது ஒலிப்பெருக்கிகள் மற்றும் SMS மூலம் கள ஊழியர்களுக்கு அனுப்பப் படும்.
- வனத்துறை ஆனது யானைகளைக் கண்காணிப்பதற்காக ஒரு கட்டணமில்லா உதவி எண் (1800-425-4353), மேம்படுத்தப்பட்ட கம்பிவடமில்லா வலையமைப்புகள், உடல் வெப்பம் கொண்டு அடையாளம் காட்டும் ஆளில்லா விமானங்கள் மற்றும் யானை கண்காணிப்புக்கான ரேடியோ கழுத்துப் பட்டைகள் ஆகியவற்றினை அறிமுகப்

படுத்தியது.

- ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான உச்ச கட்ட யானை இடம்பெயர்வு காலத்தில் கூடுதல் பணியாளர்களுடன் முன் கள ஊழியர்களை ஆதரிக்க தற்காலிக கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

### முதலாவது மாநில அளவிலான புலிகள் வழித்தடம்

- மத்தியப் பிரதேசம் ஆனது நாட்டின் முதல் மாநில அளவிலான, பல தேசியப் பூங்கா இடையிலான புலிகள் வழித்தடத்தை உருவாக்க உள்ளது.
- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) மற்றும் பொதுப்பணித் துறை (PWD) ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து இந்த வழித்தடம் உருவாக்கப்படுகிறது.
- இதில் வனப்பகுதிகளில் சுரங்கப்பாதைகள், மெதுவான வேகத்திலான போக்குவரத்து மண்டலங்கள் மற்றும் புலிகளின் நடமாட்டம், சுற்றுலா மற்றும் இணைப்பை சமநிலைப் படுத்தும் வனவிலங்குகளுக்கு உகந்த பாதுகாப்பான வடிவமைப்புகள் ஆகியவை அடங்கும்.
- இந்த நடைபாதை சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான சுற்றுலாவை ஊக்குவிப்பதையும் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.





## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### விண்வெளியில் முதல் சக்கர நாற்காலி பயணி

- ஜெர்மனியைச் சேர்ந்த் பொறியியலாளரான மைக்கேலா பெந்தாஸ், விண்வெளிக்குச் சென்ற முதல் சக்கர நாற்காலி பயனராக ஆனார்.

- கடல் மட்டத்திலிருந்து 100 கிலோமீட்டர் உயரத்தில் அமைந்துள்ள, விண்வெளியின் விளிம்பைக் குறிக்கின்ற கார்மன் கோட்டை அவர் கடந்தார்.
- NS-37 என்று அழைக்கப்பட்ட இந்தப் பயணம், அமெரிக்காவின் டெக்சாஸின் வான் ஹார்னில் இருந்து தொடங்கப்பட்டது.
- மைக்கேலா பெந்தாஸ் ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தில் (ESA) பணி புரியும் ஒரு விண்வெளி மற்றும் எந்திர மின்னணுவியல் பொறியாளர் ஆவார்.




## லோக்மத் பாராளுமன்ற விருதுகள் 2025

**Lokmat Parliamentary Awards 2025 Winners**

| Award | Winner |
|---|---|
| Lifetime Achievement Award (Lok Sabha) | T. R. Baalu |
| Best Parliamentarian Award (Lok Sabha) | Jagdambika Pal |
| Best Woman Parliamentarian Award (Lok Sabha) | Sangeeta Kumar Singh Deo |
| Best Debutant Parliamentarian Award (Lok Sabha) | Iqra Choudhary |
| Lifetime Achievement Award (Rajya Sabha) | Digvijaya Singh |
| Best Parliamentarian Award (Rajya Sabha) | Sanjay Singh |
| Best Woman Parliamentarian Award (Rajya Sabha) | Dola Sen |
| Best Debutant Parliamentarian Award (Rajya Sabha) | Sudha Murty |


- 6வது லோக்மத் பாராளுமன்ற விருதுகள் நிகழ்வானது புது டெல்லியில் நடைபெற்றது.
- மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களின் சிறந்த செயல்திறனை இந்த

விருதுகள் அங்கீகரிக்கின்றன.

- மாநிலங்களவை உறுப்பினர்களான திக்விஜய சிங் மற்றும் சுதா மூர்த்தி உட்பட எட்டு உறுப்பினர்கள் இந்த விருதுகளைப் பெற்றனர்.
- மூத்தத் திமுக தலைவரும் உறுப்பினருமான T. R. பாலு வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றார் (மக்களவை).
- பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறந்தப் பணிகளை அங்கீகரிக்கும் வகையில் லோக்மத் பாராளுமன்ற விருதுகள் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன.

# முக்கிய தினங்கள்

## கோவா விடுதலை தினம் 2025 - டிசம்பர் 19




- 1961 ஆம் ஆண்டு போர்த்துகீசிய ஆட்சியில் இருந்து கோவா விடுவிக்கப் பட்டதை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 1947 ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகும் கோவா போர்த்துகீசியக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.
- 1510 ஆம் ஆண்டு முதல் 450 ஆண்டுகளுக்கும் மேலாக போர்த்துகீசியர்கள் கோவாவை ஆட்சி செய்தனர்.
- விஜய் நடவடிக்கை (1961) என்பது கோவா, டாமன் மற்றும் டையூவை விடுவிப்பதற்காக இந்திய காலாட்படை, கடற்படை மற்றும் விமானப்படை மேற்கொண்ட ஒரு இராணுவ நடவடிக்கையாகும்.
- இந்த நடவடிக்கை சுமார் 36 மணி நேரத்தில் நிறைவடைந்தது, மேலும் போர்த்துகீசிய

ஆளுநர் 1961 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதியன்று சரணடைந்தார்.

## சர்வதேச மனிதகுல ஒற்றுமை தினம் 2025 - டிசம்பர் 20

- 2002 ஆம் ஆண்டு உலக ஒற்றுமை நிதியம் உருவாக்கப்பட்டதையடுத்து, முதன்முதலில் ஐ.நா. சபையினால் இத்தினம் நிறுவப்பட்டது.
- இது வறுமை ஒழிப்பு, சுகாதார சமத்துவம், சமூக நீதி மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக நாடுகளிடையே உலகளாவிய ஒற்றுமை, பகிரப்பட்டப் பொறுப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Unity for Better Health and Inclusive Development" என்பதாகும்.





## உலக தியான தினம் 2025 - டிசம்பர் 21




- தியானம் மூலம் உள் அமைதி, மன நல்வாழ்வு மற்றும் உலகளாவிய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது முதன்முதலில் ஐக்கிய நாடுகள் பொது சபையினால் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 06 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டது.
- தனிநபர் மற்றும் சமூக நிலைகளில் அமைதி மற்றும் நல்வாழ்வை ஆதரிக்கும் ஒரு நடைமுறையாக தியானத்தை அங்கீகரிப்பதற்காக என்று இந்த நாள் கொண்டாடப் படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபை 2025 ஆம் ஆண்டில் நியூயார்க் நகரில் உள்ள அதன் தலைமையகத்தில் இரண்டாவது உலக தியான தினத்தைக் கொண்டாடியது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Promoting Inner Peace Worldwide" என்பதாகும்.

### குளிர்கால நீண்ட இரவு நாள் 2025 - டிசம்பர் 21




- இது வடக்கு அரைக்கோளத்தில் மிகக் குறுகிய பகல் மற்றும் நீண்ட இரவைக் குறிக்கிறது.
- வட துருவம் ஆனது சூரியனிடமிருந்து வெகு தொலைவில் சாய்ந்திருக்கும் போது இந்த நிகழ்வு நிகழ்கிறது.
- இந்த நாள் வானியல் குளிர்காலத்தின் முறையான தொடக்கத்தைக் குறிக்கிறது.
- டிசம்பர் 21 ஆம் தேதிக்குப் பிறகு, வடக்கு அரைக்கோளம் வசந்த காலத்தை நோக்கி நகர்வதால் பகல் நேரம் படிப்படியாக அதிகரிக்கிறது.

## இதரச் செய்திகள்

### உலகின் பணக்கார குடும்பங்கள் குறித்த அறிக்கை 2025

- ப்ளூம்பெர்க் நிறுவனமானது, 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் பணக்காரக் குடும்பங்கள் குறித்த அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கை உலகளவில் சுமார் 25 பணக்காரக் குடும்பங்களின் செல்வத்தையும் அவர்களின் மொத்த செல்வ வளர்ச்சியையும் கண்காணிக்கிறது.
- வால்டன் குடும்பம் (வால்மார்ட், அமெரிக்கா) 513.4 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் முதலிடத்தில் உள்ளது.

- அதைத் தொடர்ந்து 335.9 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் அல் நஹ்யான் குடும்பம் (UAE), 213.6 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் அல் சவுத் குடும்பம் (சவுதி அரேபியா) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- அம்பானி குடும்பம் (ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்) 105.6 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் 8வது இடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் உள்ள ஒரே இந்திய குடும்பம் இதுவாகும்.
- முதல் 25 குடும்பங்களின் ஒருங்கிணைந்த சொத்து மதிப்பு என்பது தோராயமாக 2.9 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும் என்ற நிலையில் இது 2024 ஆம் ஆண்டை விட 358.7 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அதிகமாகும்.



World's Richest Families 2025

| Rank | Family | Country / Region | Estimated Net Worth |
|---|---|---|---|
| 1 | Walton Family | United States | $513.4 Billion |
| 2 | Al Nahyan Family | United Arab Emirates | $335.9 Billion |
| 3 | Al Saud Family | Saudi Arabia | $213.6 Billion |
| 4 | Hermés Family | France | $184.5 Billion |
| 5 | Koch Family | United States | $150.5 Billion |
| 6 | Mars Family | United States | $143.4 Billion |
| 7 | Al Thani Family | Qatar | $110 Billion |
| 8 | Ambani Family | India | $105.6 Billion |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★